மருத்துவமனை, கே.எம்.சி. இவைகளில் இருக்கிற அளவுக்கு தனியாரிடத்தில் கருவிகள் இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஆனால் சில குறிப்பிட்ட கருவிகள் தனியாரிடத்திலே, அதுவும் பல கோடி ரூபாய் போட்டு அவர்களால் வாங்கி வைக்க முடிகிறது. ஆனால், அரசாங்கத்திற்கு இருக்கிற சிக்கல் உங்களுக்கு என்ன என்று தெரியும். நம்முடைய ரெயில்வே ஆஸ்பத்திரிக்குப் போனால் இந்தப் பிரச்சினை இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலே இருக்கிற மருத்துவமனைகளுக்குப் போனால் இந்தப் பிரச்சினை இருக்கிறது. எனவே, இந்தச் சிக்கல் நமக்கு இருக்கிற நிதிப் பிரச்சினையின் காரணமாகத்தானே தவிர வேறல்ல. இன்னொன்று நமக்கு இருக்கின்ற சிக்கல், நாம் சில கருவிகளை வாங்க திட்டமிட்டு, அதற்குப் பின்னாலே அவற்றை வேண்டாமென்று விட்டிருக்கிறோம் காரணம் ஒரு ஆண்டிலே மொத்தமாகவே ஒரு 100 நோயாளிகள் தான் அதிலே பயன்பெறுகிறார்கள். எனவே, அந்தக் கணக்கைப் பார்த்துவிட்டு அதனுடைய விலை ஏறத்தாழ 3 கோடி ரூபாய். அந்தக் காரணத்தால் 3 கோடி ரூபாயை அதற்குப் போடுவதற்குப் பதிலாக ஓர் ஆண்டிற்கு ஆயிரம், இரண்டாயிரம் பேர் பயன்பெறுகிற அளவுக்கு ஒரு கருவியை வாங்கினால் உபயோகமாக இருக்கும் என்று சொல்லி, அந்தப் பணத்தை இதற்காக செலவிட்டு இன்றைக்கு அந்தக் காரியத்தை நாம் செய்து கொண்டிருக்கிறோம் நிச்சயமாக அரசாங்கத்திற்கு நல்ல நிதிநிலை வருகிறபோது மத்திய அரசாங்கம் தாராள மனதோடு பணத்தைக் கொடுக்கிற போது, அந்தக் கருவிகளை எல்லாம் வாங்கி நிறைத்து விடுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 47, டாக்டர்.ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

47—

திருச்சியில் குடிசை மாற்று வாரிய வீடுகளை குடியிருப்போருக்கே வழங்குதல்

*10581 டாக்டர் ச. ஆரோக்கியசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளை குடியிருப்போருக்கே வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன ?

1993 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே இவ்வினா எழவில்லை.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி நகராட்சி, செங்குளம் என்ற இடத்தில், குடிசை மாற்று வாரியத்தால் வீடுகள் கட்டப்பட்டு, நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. அந்தக் காலனியை நகராட்சியிடம் குடிசை மாற்று வாரியம் ஒப்படைக்காததால் குடிநீர் வசதி, ரோடு வசதி, கழிப்பிட வசதி செய்யப்படாமல் உள்ளது. பன்னெடுங்கால மாக வாடகைக் கொடுத்து வாழும் அந்த ஏழை மக்களுக்கு, புரட்சித் தலைவியையே நம்பி வாழ்கின்ற அந்த ஏழையெளிய மக்களுக்கு அந்த வீடுகளை வழங்க புரட்சித் தலைவி அரசு முன்வருமா என மீண்டும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தின் குடிசை மாற்று திட்டத்தின் கீழ் திருச்சி, பீச்சான்குளத்தில் 393 குடியிருப்புகளும், கல்மந்தை திட்டப் பகுதியில் 64 குடியிருப்புகளும், ஆக மொத்தம் 457 குடியிருப்புகள் கட்டப்பட் டிருக்கின்றன. அரசு ஆணை 897, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 3—8—1990-ல், வாடகை அடிப்படையில் கட்டப்பட்ட குடிசை மாற்று வாரிய குடி யிருப்புகள். அக்குடியிருப்புகளில் வசிக்கும் தகுதி வாய்ந் தோருக்கு, அவர்களிடமிருந்து 50 சதவிகிதம் வாடகை நிலுவைத் தொகையை வசூல் செய்தபின் தவணை முறை திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அந்த வகையிலே தான், செங்குளம் பற்றிய குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. எனவே பீச்சான்குளம் மற்றும் கல்மந்தை திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்புகள் பற்றிய குறிப்புகள் மட்டுமே உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் அமைச்சராக இருந்த, முன்னாள் குடிசை மாற்று வாரிய அமைச்சர் அவர்கள் இந்தக் குடியிருப்புகளை எல்லாம் குடியிருப்பவர்களுக்கே சொந்த மாக மாற்றித் தருவதாக சொன்னார்கள். ஆனால், இப்போது இருக்கின்ற அமைச்சர் அவர்கள், அதுவும் திருச்சிக்குப்,

பக்கத்திலிருந்து வந்திருக்கின்ற அமைச்சர், அதை மாற்ற இயலாது என்று சொல்கிறார்கள். ஏழை மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகள் 'அட்லீஸ்ட்' அந்த குடிசை மாற்று வாரிய வீடுகள் வெள்ளை அடிக்கப்படாமல் இருக்கிறது. எந்தவித மான வசதிகளும் செய்யப்படவில்லை. குறைந்தபட்சம் நக ராட்சிக்காவது அந்த வீடுகளை மாற்றிக் கொடுத்தால் அங்கே லைட் வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி செய்ய முடியும். அதையும் செய்ய மறுக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்காவது உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய வீடுகள் வாடகை அடிப்படையில் அங்கே குடியிருப்பவர்களுக்கே ஒப்படைக்கப்படுகின்றன. எனவே, வாடகை அடிப்படையில் தான் அங்கே குடியமர்த்தப்படுகிறார்கள். அவற்றை நகராட் சிக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் ஒப்படை செய்வதற் கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண். 48, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

48—

திருச்சி குடிசை மாற்று வாரிய வீடுகளை விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை.

*13295—டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் குடிசை மாற்று வாரியத்தினரால் கட்டப்படும் வீடுகளை விரைவில் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.